# Tamil Language Eligibility Test

**Sr. No.** **Question Body and Alternatives**

1 1 ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் வரும் நிறுத்தக்குறி

A) முற்றுப்புள்ளி

B) முக்காற்புள்ளி

C) காற்புள்ளி

D) அரைப்புள்ளி

2 2 பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து

A) எழுத்துப்பேறு

B) பெயர் இடைநிலை

C) இடைநிலை

D) விகுதி

3 3 சங்க காலத்தில் ‘தகடூர்’ என்று அழைக்கப்பட்ட ஊர்

A) திருக்கோவிலூர்

B) திண்டுக்கல்

C) தருமபுரி

D) தாராபுரம்

4 4 “இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்” என்னும் தொடர் இடம்பெற்ற நிகண்டு

A) சூடாமணி நிகண்டு

B) திவாகர நிகண்டு

C) பிங்கல நிகண்டு

D) அகராதி நிகண்டு

5 5 இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இதில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

A) தினைச் சோறு

B) பாற்சோறு

C) வரகுச் சோறு

D) நெற்சோறு

6 6 உலகில் கப்பல் கட்டும் கலையில் மர ஆணிகளைப் பயன்படுத்தியவர்கள்

A) டச்சுக்காரர்கள்

B) ஆங்கிலேயர்கள்

C) இத்தாலியர்கள்

D) தமிழர்கள்

7 7 ‘எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது’ என்னும் இலக்கணம் பொருந்தும் தொடரைத் தேர்க.

A) அண்ணனோடு போ

B) பார்த்த பையன்

C) குதிரை தாண்டியது

D) மகளே தா

8 8 இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச் சுவடிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடம்

A) திருவனந்தபுரம் நடுவண் நூலகம்

B) கொல்கத்தா தேசிய நூலகம்

C) சென்னை கன்னிமரா நூலகம்

D) தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்

9 9 கலிங்கத்துப்பரணியைத் ‘தென்தமிழ்த் தெய்வப்பரணி’ என்று புகழ்ந்தவர்

A) ஒட்டக்கூத்தர்

B) புகழேந்தி

C) சேக்கிழார்

D) கம்பர்

10 10 “கார்த்திகை தீபமெனக் காடெல்லாம் பூத்திருக்கும்” என்ற சுரதாவின் பாடல் இடம்பெற்ற நூல்

A) தேன்மழை

B) அமுதும் தேனும்

C) துறைமுகம்

D) சங்கொலி

11 11 ‘வடதிராவிட மொழிகள்’ என்னும் வகைமைக்குள் பொருந்தாததைத் தேர்க

A) குரூக்

B) மண்டா

C) பிராகுய்

D) மால்தோ

12 12 கோட்டையைக் காத்தல், கோட்டையைக் கைப்பற்றுதல் ஆகிய செயல்களுக்கு உரிய புறத்திணைகள் முறையே

A) உழிஞை, நொச்சி

B) தும்பை, உழிஞை

C) நொச்சி, உழிஞை

D) நொச்சி, தும்பை

13 13 “மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” – என்று கடலில் கிடைக்கும் முத்துக்கு ஈடானது வயலில் கிடைக்கும் நெல்மணிகள் எனக் கூறும் இலக்கியம்

A) திருவிளையாடற் புராணம்

B) முக்கூடற் பள்ளு

C) கம்பராமாயணம்

D) நாலடியார்

14 14 “வாடா இராசா, வாடா கண்ணா” என்று தன் வீட்டுக் காளை மாட்டினை ஒருவர் அழைப்பது

A) திணை வழுவமைதி

B) பால் வழுவமைதி

C) இட வழுவமைதி

D) மரபு வழுவமைதி

15 15 “இராவண காவியம் – காலத்தின் விளைவு ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப் பொறி, உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்” என்று கூறியவர்

A) பேரறிஞர் அண்ணா

B) மூதறிஞர் இராஜாஜி

C) கவிஞர் சுரதா

D) பெருந்தலைவர் காமராஜர்

16 16 ஆழ்வார்களுள் ஒருவரான ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை

A) பேயாழ்வார்

B) பூதத்தாழ்வார்

C) பெரியாழ்வார்

D) நம்மாழ்வார்

17 17 ‘தமிழ்மொழியின் உபநிடதம்’ என்று போற்றப்படும் நூல்

A) திருக்குறள்

B) நாலடியார்

C) தாயுமானவர் பாடல்கள்

D) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

18 18 ஆனைமலையில் வாழும் காடர்கள் பேசும் மொழி

A) வக்ர போலி

B) இருளா

C) ஆல் அலப்பு

D) படுக மொழி

19 19 மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை இருந்த செய்தியை அறிவிக்கும் நூல்

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) சீவகசிந்தாமணி

D) திருமுருகாற்றுப்படை

20 20 ‘அன்பால் கட்டினார்’ என்பது

A) மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்

B) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

C) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

D) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

21 21 இந்தியா சுதந்திரம் பெற்ற ஆண்டிற்குரிய தமிழெண்களைத் தேர்க

A) ககூசஎ

B) ககூரு0

C) கஅச0

D) கஅசஅ

22 22 நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ‘காலத்தின் சுருக்கமான வரலாறு’ எனும் நூலின் ஆசிரியர்

A) ஐன்ஸ்டைன்

B) ஸ்டீபன் ஹாக்கிங்

C) ஜான் வீலர்

D) நியூட்டன்

23 23 எதிர்கால இடைநிலையைத் தேர்க

A) வ்

B) த்

C) கிறு

D) ற்

24 24 தவறான கூற்றைத் தெரிவு செய்க

A) எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது

B) வினைத்தொகையில் வல்லினம் மிகாது

C) உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது

D) உவமைத்தொகையில் வல்லினம் மிகாது

25 25 செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து வேறுபொருள் உணர்த்துவது

A) பொருள் பின்வரு நிலையணி

B) பொருள் வரு நிலையணி

C) சொல்பொருள் பின்வரு நிலையணி

D) சொல் பின்வரு நிலையணி

26 26 சந்திரயான் – 1 – இன் திட்ட இயக்குநர்

A) அருணன் சுப்பையா

B) அப்துல் கலாம்

C) மயில்சாமி அண்ணாதுரை

D) வளர்மதி

27 27 மொழியின் முதல், இடை, கடை என மூவிடங்களிலும் அளபெடுப்பது

A) இன்னிசை அளபெடை

B) சொல்லிசை அளபெடை

C) ஒற்றளபெடை

D) செய்யுளிசை அளபெடை

28 28 ‘வயிரியம்’ என்ற சொல்லின் பொருள்

A) அமைச்சர்

B) புலவர்

C) அரசர்

D) கூத்தர்

29 29 ‘தமிழ்ப் பண்பாடு’ என்னும் இதழைத் தொடங்கியவர்

A) அகத்தியலிங்கம்

B) மறைமலையடிகள்

C) பரிதிமாற் கலைஞர்

D) தனி நாயகம் அடிகள்

30 30 இளவேனிற் காலத்திற்குரிய மாதங்கள்

A) சித்திரை, வைகாசி

B) ஆடி, ஆவணி

C) ஆவணி, புரட்டாசி

D) ஐப்பசி, கார்த்திகை

31 31

பொருத்தி விடை தேர்க :

| | பெயர் | | பிஞ்சு வகை |
|---|---|---|---|
| (a) | வடு | 1. | இளம்பாக்கு |
| (b) | மூசு | 2. | வாழைப்பிஞ்சு |
| (c) | கச்சல் | 3. | பலாப்பிஞ்சு |
| (d) | நுழாய் | 4. | மாம்பிஞ்சு |

A) (a) 3 (b) 2 (c) 1 (d) 4

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 4 (b) 2 (c) 1 (d) 3

D) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

32 32

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. | தோன்றல் |
| (b) | முல்லை | 2. | சேர்ப்பன் |
| (c) | மருதம் | 3. | வெற்பன் |
| (d) | நெய்தல் | 4. | ஊரன் |

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

33 33

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | மணப்பாறை | 1. | ஆட்டுச் சந்தை |
| (b) | ஈரோடு | 2. | மாட்டுச் சந்தை |
| (c) | அய்யலூர் | 3. | பூச்சந்தை |
| (d) | தோவாளை | 4. | ஜவுளிச் சந்தை |

A) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

B) (a) 1 (b) 4 (c) 2 (d) 3

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

34 34

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | வினைமுற்றுத் தொடர் | 1. | மல்லிகை மலர்ந்தது |
| (b) | பெயரெச்சத் தொடர் | 2. | சென்றனர் வீரர் |
| (c) | எழுவாய்த் தொடர் | 3. | தேடிப் பார்த்தேன் |
| (d) | வினையெச்சத் தொடர் | 4. | வரைந்த ஓவியம் |

A) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

C) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

35 35

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | குறளடி | 1. | ஆறு சீர்கள் |
| (b) | சிந்தடி | 2. | இரண்டு சீர்கள் |
| (c) | அளவடி | 3. | மூன்று சீர்கள் |
| (d) | கழி நெடிலடி | 4. | நான்கு சீர்கள் |

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

36 36

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | நாளிகேரம் | 1. | அரசமரம் |
| (b) | நரந்தம் | 2. | தென்னை |
| (c) | கோளி | 3. | பச்சிலை மரம் |
| (d) | தமாலம் | 4. | நாரத்தை |

A) (a) 1 (b) 4 (c) 2 (d) 3

B) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

C) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

D) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

37 37

பொருத்தி விடை தேர்க :

| | நூல் | | இலக்கிய வகை |
|---|---|---|---|
| (a) | சிறுபஞ்சமூலம் | 1. | காப்பிய இலக்கியம் |
| (b) | குடும்பவிளக்கு | 2. | சங்க இலக்கியம் |
| (c) | சீவகசிந்தாமணி | 3. | அற இலக்கியம் |
| (d) | குறுந்தொகை | 4. | தற்கால இலக்கியம் |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

C) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

38 38

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | காஞ்சி | 1. | நிரை கவர்தல் |
| (b) | வஞ்சி | 2. | எதிர்த்துப் போரிடல் |
| (c) | கரந்தை | 3. | போருக்குச் செல்லல் |
| (d) | வெட்சி | 4. | நிரை மீட்டல் |

A) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

39 39

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | சொல் + அழகு | 1. | உயிரீறு + மெய்ம்முதல் |
| (b) | மண் + குடம் | 2. | உயிரீறு + உயிர் முதல் |
| (c) | வாழை + இலை | 3. | மெய்யீறு + உயிர் முதல் |
| (d) | வாழை + மரம் | 4. | மெய்யீறு + மெய்ம்முதல் |

A) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

40 40

பொருத்தி விடை தேர்க:

| | வேற்றுமை | | உருபு |
|---|---|---|---|
| (a) | நான்காம் வேற்றுமை | 1. | 'ஐ' |
| (b) | ஆறாம் வேற்றுமை | 2. | 'கண்' |
| (c) | இரண்டாம் வேற்றுமை | 3. | 'கு' |
| (d) | ஏழாம் வேற்றுமை | 4. | 'அது' |

A) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

41 41

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | காலில் அணிவது | 1. | சூழி |
| (b) | இடையில் அணிவது | 2. | குண்டலம் |
| (c) | காதில் அணிவது | 3. | அரைவடங்கள் |
| (d) | தலையில் அணிவது | 4. | சிலம்பு |

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

42 42

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | அன்மொழித்தொகை | 1. | பவளவாய் |
| (b) | வினைத்தொகை | 2. | தாய்சேய் |
| (c) | உவமைத்தொகை | 3. | மஞ்சள் சட்டை பாடினார் |
| (d) | உம்மைத்தொகை | 4. | சுடுசோறு |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

C) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

D) (a) 3 (b) 2 (c) 1 (d) 4

43 43

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | வினா வகை | 1. | மூன்று |
| (b) | விடை வகை | 2. | ஐந்து |
| (c) | பால் வகை | 3. | எட்டு |
| (d) | இடம் வகை | 4. | ஆறு |

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 4 (b) 2 (c) 1 (d) 3

C) (a) 3 (b) 2 (c) 1 (d) 4

D) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

44 44

பொருத்தி விடை தேர்க :

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | கடும்பு | 1. | பள்ளம் |
| (b) | அல்கி | 2. | தினை |
| (c) | இறடி | 3. | சுற்றம் |
| (d) | படுகர் | 4. | தங்கி |

A) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

B) (a) 2 (b) 1 (c) 3 (d) 4

C) (a) 1 (b) 2 (c) 4 (d) 3

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

45 45

பொருத்தி விடை தேர்க :

(a) திருமால் குன்றம் — 1. திருத்தணி மலை
(b) நெடுவேள் குன்றம் — 2. பறம்பு மலை
(c) பிரான் மலை — 3. அழகர் மலை
(d) வேலவன் குன்றம் — 4. சுருளி மலை

A) (a) 4 (b) 2 (c) 3 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

C) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

D) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

46 46

பொருத்தி விடை தேர்க :

(a) நற்றவம் — 1. வினைத்தொகை
(b) செய்கோலம் — 2. உவமைத்தொகை
(c) தேமாங்கனி — 3. இடைக்குறை
(d) கொடியனார் — 4. பண்புத்தொகை

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 3 (b) 2 (c) 1 (d) 4

C) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

D) (a) 1 (b) 4 (c) 3 (d) 2

47 47

பொருத்தி விடை தேர்க :

(a) கோக்கோதை நாடு — 1. சீவகன்
(b) கோக்கிள்ளி நாடு — 2. சேரன்
(c) வெண்குடையான் நாடு — 3. சோழன்
(d) ஏமாங்கத நாடு — 4. பாண்டியன்

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

48 48

பொருத்தி விடை தேர்க :

(a) ஆற்றுதல் 1. புணர்ந்தாரைப் பிரியாமை

(b) போற்றுதல் 2. ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

(c) அறிவு 3. மறை பிறர் அறியாமை

(d) நிறை 4. பேதையார் சொல் நோன்றல்

A) (a) 4 (b) 2 (c) 1 (d) 3

B) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

49 49

பொருத்தி விடை தேர்க :

(a) வாகை 1. கோட்டையைக் காத்தல்

(b) தும்பை 2. சுற்றி வளைத்தல்

(c) நொச்சி 3. வலிமையை நிலைநாட்டப் போரிடல்

(d) உழிஞை 4. வெற்றியில் மகிழ்தல்

A) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

50 50

பொருத்தி விடை தேர்க :

(a) மா முன் நேர் 1. வெண்சீர் வெண்டளை

(b) விளம் முன் நிரை 2. ஒன்றிய வஞ்சித்தளை

(c) காய் முன் நேர் 3. நேரொன்றாசிரியத் தளை

(d) கனி முன் நிரை 4. நிரையொன்றாசிரியத் தளை

A) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 3 (b) 4 (c) 1 (d) 2